## கீழ்வாணி பழனி முதலியார்

பட்டாளத்துரைமார் தானும்
பாங்குடனே கும்பலாய் சேர்ந்து
நட்டனையாகவே தான்
ரணிவேர் ரணி முழங்க
திட்டமாய் சிப்பாய் மார்கள்
சில சில பேர்கள் கூடி
அஷ்டமாய் அஷ்டதிக்கும்
அடவுடன் சண்டை செய்தார்
சார்வரி வருஷம் ஆடி மாதம் தளத்தில் 9ம் தேதி
தாரணி சுக்கிர வாரம் தன்னில்
தாரணியெங்கும் புகழவே
சீர் மிகுந்த சென்னப்பட்டணம்
திருச்சினாப்பள்ளி மதுரையில்
சேர்ந்த கருணா நவாப்பின் பாளயம் வந்திரங்கவே
பாளயமென்ன பாளயம் நவாப்பினுடைய பாளயம்
மருந்துப்புட்டிகள் ஒருபுறம் மருந்து லாணிகள் ஒருபுறம்

இப்படிக் கொத்த பாளயம் வந்து இறங்குகின்ற வேளையிலே

செப்பமுடன் துரைகள் எல்லாம்
சேர்ந்து சலாம் வாங்கினார்

ஒப்படுடன் துரைகள் எல்லாம்
உவந்து சலாம் வாங்கினார்
சலாம் வாங்கி திரும்பின பேர்கள்
சண்டை செய்ய தோணினார்.

## காமாக்ஷியம்மன் பாட்டு

வல்லான வென்றவர்கள் மென்மை கிசையுடையவர்கள்
வாது புரி காஞ்சி நகரில் வாது காமாக்ஷியுட
பாதச் சிலம்பிலே வந்த செங்குந்தர்.

பொல்லாத காலனை கோலயிட்டேயவர்
புவித்தின்ற விரதமுடையோர்
புகழ் பெற்ற காவியை கையாலெடுத்துமே
பொருந்திய கருமாரி பாய்ந்த பெரியோர்
சல்லாபமாகவே உமையவள் சாமனை
சாமிபேர் பெற்ற பெரியோர்
சகல கல வல்லவன் கந்தன் சகோதரன்
சாம்பவாணி வாசமுடையோர்
தொல்லாளே ஏயுந்த பதனெட்டு பாவோட
தொல்வுலகில் பெற்ற பெரியோர்
சிவனை யெடுத்து துதிக்கும் பிரகாசிக்கும்
செங்குந்தமே.

காரணமுதாகவே வீரான தேரின் மேல்

கம்பமது கொண்டு நட்டு

கண்ணுக்கு எத்தாத உயரமது தன்னிலே

வல்லாளும் கோட்டையது வே கட்டி
அதன் பேரிலே நிற்க.

சேரன், சோழன், பாண்டியன் மூவர் ராஜாக்களும்
ஜெயிக்க

வகையறியாது ஓ செங்குந்த முதலியார்களே

நீங்களே ஜெயித்து வர வேண்டுமென்று

அவர்கள் ஐந்து பேரையும் ஏற தெப்பம் போல்
கட்டியே

அதில் வல்லான் உதை தட்டி மார் உருவி
ஒருவன் மாட்டான்

அவனை கொல்லாபுரத்திலே கொண்டு போய்
போட்டுமே

அவர்கள் மெய்த்தலை கேட்கவும்
இவர்கள் பொய்த்தலை கொடுக்கவும்

சித்தர்கள் மெச்சிக்கவும், தில்லைமா மோகநகர்

தன்னில் வளர்கின்ற செல்லமுத்துக் குமரனே.

---

4.

செங்கமால் இருவந்தி தாமரையுள் நூல் கொய்து
திங்க திருவட்டத்தில் இழைத்து
தேவகளாகவும் சிவரிசிகள் பாவோட
தோய்ந்து ஆய்ந்து அலவடுதலுமாம்
பங்கையன் நான் முகன் படமரமதாகவே
பட்சமால் வெண்குண்டமாம்
புரியானதத்தீசர் விழுது கோலாகவும்
பாதி ஆதி தேசன் (சேஷன்) வலுகையர் ஆகவும்
வெங்கட் றடாமுனி விஷக் கோலுமாகவே
வேதமுனி மிதி பலகையாம்
மேலான நாருதர் நாடாவுமாகவே
மெலிதான பட்டு நெய்து

கொங்கர வடம் ஆண்ட ஆதலம் தன்னிலே
புகழ் பெற்ற வல்லானை ரிசபக் கொடி பெற்ற
புகழ் பெற்ற செங்குந்தமே.

———— + ————

5

அலக் கொட்டவும் சிலைதனை யெடுக்கவும்
ஆச்சரியமாய் இது வென்னும்
அதட்டிப்பிடித்து நால் தண்டையும் கட்டியே
அருவது மிகுந்தவுடனே
நிலையான உறவரை தான் சமய சங்கிலி
நிறைந்த வில் பாவாடையும்
கலையாமலே சூரி கைதன்னில் யெடுத்துமே
கல கல வென்று அலக் கொட்டியே
காரணமாகவே மார்பில் சுதையை
கைகளாலே அருந்து
பலபேர்கள் அறியவே சிலைதனை சாற்றியே
பண்புடன் கொண்டுபோய் கீழ் வாணி நகர்
குடி கொண்ட பகுதி முத்தையர் துரையே

---

சிவனுடைய அருளினால் பிறந்த செங்குந்தளாம்
சிறைவீர வாகு தேவர் இந்த குடி கொண்ட தொரு
முத்துக் குமாரனுடை திருவிழா தேர் எடுத்து
தெரு வெங்கும் ஆடிவர சகலரும் புகழ்ந்துமே
சேர்ந்து வேடிக்கை பார்க்க தேர் வரும் அதிசயம்
கண்டு சிலர் திடுக்கிடும் செங்குந்தளாம்
ஆ - ஆ - இது வென்ன அதிசயம்

6,

தேர் சுத்தி ஆடிவரும் அதிசயம் தான்

அண்டியே கூடவரும் பூதப் பிசாசுகள்

அவருடைய வருப்பிலேதான்

தவ முனிவர் போலவே கூடவரும் முகவியார்கள்

சந்தோசமாகவேதான் சுத்தியோடு

வாங்கு தான் இதோ நான் இத்தி

உதிரத்தை தருகிறேன் பேய்களுக்கு

சண்டாள துஷ்டர்களும் பில்லி சூனிய மெல்லாம்

தவிடு பொடியாக வோட அகமது கள் ஊதாமல்

சுகந்தந்து காத்திடும் ஆலயத் தெய்வ மெல்லாம்

அறு முகவர் துணைவரேன் எதிரிடும் பொல்லாத

ஆகாத எதிரிதனையே ஆறுமாசத்திலே

தால்கை வராமலே அடக்கியே முடக்கிவைப்பார்

அஞ்சாமல் உயிருக்கு நெஞ்சி துணைவான தொரு

அலய குல தெய்வமே

——— x ———

அ. கீழ்வாணி முதலியார்களின் சாதி உள்ள ~~[illegible]~~ பிரிவு

1, இருப்புளியான்

2. செலம்பரத்தான்

3, காஞ்சான்

4. அந்தியூரான்

5 பல்லடத்தான்

6. மாங்கா முழுங்கி

7. பச்சாங் கூட்டம்

8. குன்னத்தூரான்

9 { பரவளந்தான்
நல்லான் கூட்டம்

10 ஆச்சாம் பனையாங் கூட்டம்

11 ஈஞ்சாங் கூட்டம்